# Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Sessions Judge, Magalir Neethi Mandram,
(Fast Track Mahila Court), Villupuram.

Sessions Case No.43-2019

Deposition of witness No. for Prosecution / Defence / Court

| | | |
|---|---|---|
| Name | :திரு.ஏழுமலை | அ.சா.6 LW.7 |
| Father's Name | : சுப்பிரமணி | |
| Village | : பட்டனம் கிராமம் | |
| Taluk | : திண்டிவனம் தாலுக்கா | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : 30 | |
| Time | : 11.39 am - 11.51 am | |

Solemnly affirmed in accordance with the provisions of X of 1873 on the 02nd day December 2021.
02.12.2021
முதல் விசாரணை.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தனியார் கம்பெனியில் கேஷியராக பணிபுரிந்து வருகிறேன். 21.1.2017 அன்று காலை சுமார் 8.45 மணியளவில் நான் இயற்கைஉபாதை கழிப்பதற்காக ஏரிக்கரைக்கு போனேன். அப்போது மணியக்காரர் அந்த வழியாக போனார். தலையாரி பெயர் செல்வம். எங்கள் மணியக்காரரும், தலையாரியும் அந்த வழியாக போனார்கள். ஏதோ ஒரு பிரேதம் கிடப்பதாக பேசிக்கொண்டார்கள். நானும், பின்னாடியே போனேன். பக்கத்தில் போய் பார்த்தபோது பெண் பிரேதம் கிடந்தது. அதன் மீது புடவை இருந்ததால் பெண் பிரேதம் என்று தெரிந்தது. மஞ்சள் கலர் மாதிரி ஒரு சேலை இருந்தது. அதன்பிறகு நான் கிளம்பிவிட்டேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை</u>

திண்டிவம் - வந்தவாசி போகும் மெயின்ரோட்டிலிருந்து மேற்குபக்கமாக வெண்மணியாற்று பட்டனம் ஏரி வழியாக போகிறது என்றால் சரிதான். எங்கள் வீடு காலனி ஏரியா என்றால் சரிதான். என் வீட்டிலிருந்து பிரேதம் கிடந்த இடம் சுமார் 3 கி.மீ இருக்கும். வி.ஏ.ஓவும், தலையாரியும் ஒரே வண்டியில் தான் போனார்கள். நான் சைக்கிளில் போனேன். வெண்மணியாற்று ரோட்டிலிருந்து எவ்வளவு தூரத்தில் பிரேதம் கிடந்தது என்றால் சுமார் 50 மீட்டர் தொலைவில் கிடந்தது. வெண்மணியாற்ற ரோட்டிலிருந்து பார்த்தால் பிரேதம் கிடக்கும் இடம் தெரியும் என்றால் சரிதான். இங்கிருந்து பார்த்தபோது கூட்டமாக இருந்ததால் நான் அந்த இடத்திற்கு போனேன். பிரேதம் கிடந்த இடத்திற்கு ஏரிக்கும், ரோட்டிற்கும் வடக்கே விவசாய நிலம் உள்ளது என்றால் சரிதான். அந்த வயலில் ஒருவர் வீடு கட்டி குடும்பம் இருக்கிறார்கள் என்றால் சரிதான். நான் போகும்போது போலீஸ் எல்லாம் அங்கு இருந்தார்கள். போலீஸ் வந்தவுடன் பிரேதத்தை கட்டினார்கள், எடுப்பதற்கு முன்பாக நான் வந்துவிட்டேன். போலீசார் என்னை என் பெயர், என்அப்பா பெயர் கேட்டார்கள், விலாசம் கேட்டார்கள். நான் சொன்ன விவரங்களை பேப்பரில் கையால் எழுதிக்கொண்டார்கள். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

# Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Sessions Judge, Magalir Neethi Mandram,
(Fast Track Mahila Court), Villupuram.

Sessions Case No.43-2019

Deposition of witness No. for Prosecution / Defence / Court

| | |
|---|---|
| Name | :திரு.ஆறுமுகம் அ.சா.7 LW.9 |
| Father's Name | : நாராயணசாமி |
| Village | : மாரியம்மன்கோவில் தெரு, வெண்மணியாத்தூர் கிராமம் |
| Taluk | : திண்டிவனம் தாலுக்கா |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 47 |
| Time | : 11.52 am - 12.10 pm |

Solemnly affirmed in accordance with the provisions of X of 1873 on the 02nd day December 2021.
02.12.2021
முதல் விசாரணை.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். 9வது வரை படித்திருக்கிறேன். எங்கள் ஊர் கூட்ரோட்டில் நானும், எங்கள் ஊரைச்சேர்ந்த பாலாஜி என்பவரும் நின்று கொண்டிருந்தோம். அப்போது அந்த வழியாக போனவர்கள் யாரோ ஏரியில் இறந்துகிடக்கிறார் என்று தகவல் சொன்னார்கள். பார்ப்பதற்காக நானும், பாலாஜியும் இருசக்கர வாகனத்தில் பிரேதம் கிடந்த இடத்திற்கு போனோம், போய் பார்த்தோம். அழுகிய நிலையில், இருபக்கமும் விலா எலும்புக்கு கீழ் பக்கத்தில் எலும்பு தெரிந்தது. பிரேதம் கவிழ்ந்து கிடந்தது, பிரேதத்தின் மேல் சந்தனக்கலரில் மினுமினுப்புடன் ஒரு சேலை இருந்தது. ஆணா, பெண்ணா என்று பார்த்தபோது காலில் மெட்டி

போட்டிருந்தார். தலை முடி எல்லாம் கழன்டு விழும் நிலையில் இருந்தது. ஜாக்கெட் போட்டபடி இருந்தது. நாங்கள் அங்கு நின்றுகொண்டிருந்தபோது போலீசார் வந்து விசாரணை செய்தார்கள். பிரேதம் அழுகிய நிலையில் இருந்ததை பார்த்ததை சொன்னேன். கையெழுத்து போட்டேன். பிரேத விசாரணை அறிக்கையில் என்னுடைய கையெழுத்து இல்லை.

<u>எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை</u>

நான் கையெழுத்துபோட்ட பேப்பரில் எழுதியிருந்ததா என்றால் எழுதாத வெற்று பேப்பரில் கையெழுத்துபோட்டேன். நான்மட்டும் தான் கையெழுத்துபேர்டேன். வேறு கையெழுத்து போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. வெண்மணியாற்று ரோடு பட்டனம் ஏரி வழியாகத்தான் போகிறது என்றால் சரிதான். அந்த ரோடு வந்தவாசி மெயின்ரோட்டிலிருந்து மேற்கு பக்கமாக பட்டனம் ஏரிவழியாக செல்கிறது என்றால் சரிதான். வெண்மணியாறு போகவேண்டும் என்றால் ஏதாவது வேலை இருந்தால் அந்த பக்கமாக போவேன். இல்லை என்றால் போகமாட்டேன். ஊரல் கிராமத்தில் இருப்பவர்களுக்கு அந்த ரோட்டை சார்ந்து நிலம் உள்ளது என்றால் சரிதான். வெண்மணியாற்று கூட்ரோட்டில் நின்றுகொண்டிருந்தபோது தான் அந்த வழியாக போனவர்கள் தகவல் சொன்னார்கள். தகவல் சொன்ன நபர் எந்த ஊர் என்று எனக்கு தெரியாது. தகவல் சொல்லும்போது காலை 9, 9.05 மணி இருக்கும். வெண்மணியாற்று கூட்ரோட்டிலிருந்து பிரேதம் கிடந்த இடத்திற்கு வந்த இடம் சுமார் 1 கி.மீ தூரத்திற்கு குறைவாக இருக்கும். என்னுடைய வண்டியில் தான் நானும், பாலாஜியும் போனோம். நாங்கள் இரண்டுபேரும் தான் போனோம். வெண்மணியாற்று கூட்ரோட்டிற்கு முதலில் யார் வந்தது என்றால் பாலாஜி திண்டிவனத்திலிருந்து அங்கு வந்திருந்தார், எப்போது வந்தார் என்று தெரியாது. நான் போகும்போது அவர் அங்கு நின்றிருந்தார். நாங்கள் பிரேதம் கிடந்த இடத்திற்கு போவதற்கு முன்பாகவே போலீசார் மற்றும் மக்கள் இருந்தார்கள். அந்த பிரேதம் மல்லார்ந்து தான் கிடந்தது. என்னை விசாரிததுபோல், மற்றவர்களை விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது. போலீசார் வந்தவுடனே கும்பல் சேரக்கூடாது என்று சொன்னார்கள். நான் வந்துவிட்டேன். வெண்மணியாற்று ஊரை சேர்ந்தவர்களில் என்னை தவிர வேறு யாராவது பார்த்தார்களா என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை அதே இடத்தில் ரோட்டில் வைத்து விசாரித்தார்கள். அது விசாலமான இடம். வெண்மணியாத்தூர் கிராமம் போகும் ரோட்டில் வைத்து விசாரித்தார்கள். சுமார் 9 மணிக்கு மேல் என்னை விசாரித்தார்கள். நான் சொன்ன விவரங்களை போலீசார் எழுதிக்கொண்டார்களா என்றால் எனக்கு தெரியவில்லை. நோட்டில் எழுதினார்களா என்று நான் கவனிக்கவில்லை. நோட்டில் கையால் எழுதினார்கள். அன்றைய தினம் பிரேதம் கிடந்த இடத்திற்கு நான் போகவே இல்லை என்றால் சரியல்ல.

நான் பிரேதத்தை பார்த்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. பார்த்தேன். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

# Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Sessions Judge, Magalir Neethi Mandram,
(Fast Track Mahila Court), Villupuram.

Sessions Case No.43-2019

Deposition of witness No. for Prosecution / Defence / Court

Name :திரு.பாலாஜி அ.சா.8 LW.10

Father's Name : ஜெயராமன்

Village : 110, பிள்ளையார்கோவில் தெரு, வெண்மணியாத்தூர் கிராமம்

Taluk :

Caste :

Calling :

Religion :

Age : 31

Time : 12.11 pm – 12.20 pm

Solemnly affirmed in accordance with the provisions of X of 1873 on the 02nd day December 2021.
02.12.2021
முதல் விசாரணை.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் 9வது வரை படித்திருக்கிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். 21.1.2017ம் தேதி காலை சுமார் 9 மணி இருக்கும், நானும், ஆறுமுகம் என்பவரும் திண்டிவனம் போகும் வழியில் கூட்ரோட்டில் நின்றுகொண்டிருந்தோம். இவ்வாறு பட்டனம் ஏரியில் ஒரு பெண் பிரேதம் கிடக்கிறது என்று சொன்னார்கள். நானும், ஆறுமுகமும் போய் பார்த்தோம். அந்த பிரேதம் எரிந்த நிலையில் அழுகிய நிலையில் இருந்தது. பிரேத்தின் மீது இருந்த புடவை சந்தனக்கலரில் பூப்போட்ட டிசைனில் இருந்தது. காலில் மெட்டி இருந்தது. ஆகியவற்றை பார்த்தேன். அந்த இடத்தில் அப்போது நாங்கள் பார்த்தோம் என்பதற்காக போலீசார் எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். நானும், ஆறுமுகமும் கையெழுத்து

போட்டோம். ஊரல் கிராமத்தை சேர்ந்தவர்களிடமும் கையெழுத்து வாங்கியதாக சொன்னார்கள். என்னிடம் காட்டப்படும் பிரேத விசாரணை அறிக்கையில் என் கையெழுத்து இல்லை. போலீசார் அந்த இடத்தில் எழுதியது நினைவில்லை. அந்த இடத்தில் இருந்தோம் என்பதற்காக கையெழுத்து வாங்கினார்கள். போலீசார் என்னிடம் எதுவும் விசாரிக்கவில்லை.

<u>எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை</u>

நானும், ஆறுமுகம் இருவருமே வெண்மணியாத்தூர் என்றால் சரிதான். கூட்ரோட்டில் ஏற்கனவே ஆறுமுகம் அங்கு நின்றுகொண்டிருந்தார், அதன்பிறகு நான் போனேன் என்றால் சரிதான். கூட்ரோட்டிலிருந்து பிரேதம் கிடந்த இடம் சுமார் 2 கிமீக்கு மேலே இருக்கும். இரண்டுபேரும் ஆறுமுகம் வண்டியில் தான் போனோம். வெண்மணியாத்தூர் ரோட்டிலிருந்து பிரேதம் கிடந்த இடத்தை பார்த்தால் தெரியுமா என்றால் தெரியாது. நாங்கள் போவதற்கு முன்பாகவே போலீசார் அங்கு இருந்தார்கள், ஜனங்கள் நிறைய பேர் இருந்தார்கள். நாங்கள் போய் பார்த்தபிறகு கொஞ்ச நேரம் அங்கு இருந்தோம். பிரேதம் எடுப்பதற்கு முன்பாகவே கிளம்பிவிட்டேன். நான் பார்த்தபிறகு எவ்வளவு நேரம் கழித்து பிரேதத்தை எடுத்து சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. நான் அந்த இடத்திற்கும் போகவில்லை, பிரேதத்தையும் பார்க்கவில்லை என்றாலும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரேதத்தை பார்த்தேன்.